RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1849

# உளவியல் சார்ந்த உறவில் தொல்காப்பியத் தோழி

ரா. பிரபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, புதுக்கோட்டை-622302, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Relationship of a Friend in Tholkaapiyam

R. Prapa [a, *]

[a] Department of Tamil, Auxilium College of Arts and Science for Women, Pudukkottai-622302, Tamil Nadu, India.

* Corresponding Author: prapasairam@gmail.com

Received: 20-08-2022
Revised: 30-09-2022
Accepted: 13-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

All languages in the world become popular after their origination but the Tamil language becomes the best and popular even before its origination. Tamil is not only a language used for speaking and writing, it also shaped the human life values in terms of feelings, rights, truth and elevation. Tolkappayim is the basic origin of this design, bearing the sources as documents and a guide book for human beings to lead a better life. This book also explains the psychological philosophy which includes many principles and rules. The book explains about the four types of women in formulas. This article explores the psychological relationship of the friend with the heroine.

**Keywords:** Companion, Psychology, Relationship, Agamarabu, Puramarabu, Mind, Grammar, Pagan, Uoodal.

## முன்னுரை

பிறந்து சிறந்த மொழிகள் ஆயிரம் இருக்க, இவ்வுலகில் சிறந்தே பிறந்த மொழி 'தமிழ்மொழி' ஒன்றுதான் இது மொழி மட்டுமல்லாது உணர்வு, உரிமை, உண்மை, உயர்வு என்ற பன்முகநோக்கில் மனிதனின் வாழ்வியல் விழுமியங்களை வடிவமைத்து தந்ததும் ஆகும். இவ்வடிவமைப்பின் ஆதியாக விளங்கி ஆதாரங்களை ஆவணங்களாகக் தாங்கிக் கொண்டு முப்பெரும் அதிகாரங்களைச் சுமந்து இன்றைய வாழ்க்கைக்கும் வழியாட்டியாக விளங்கக் கூடியது தொல்காப்பயிம் ஆகும். பல கோட்பாடுகளையும், விதிகளையும் உள்ளடக்கிய உளவியல் தத்துவங்களை எடுத்துக் சொல்லக் கூடியதாகவும் இந்நூல் அமைகிறது. இந்நூலில் நான்கு வகைப் பெண்டிரின் பண்புநலன்கள் குறித்து சூத்திரங்களில் எழுதப்பட்டுள்ளது. அவர்களின் அனைத்து உறவுகளையும் இணைக்கும் இணைப்புச் பாலமாக செயல்படக் கூடிய தோழியின் உறவுநிலையின் உளவியல் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## தொல்காப்பியத்தில் பெண்கள்

மொழியின் இருஅங்கமாக விளங்கக்கூடிய இலக்கணமும், இலக்கியமும் மகளிரின் பண்புநலன்கள், வாழ்வியல் சித்தாந்தங்கள், உளவியல், மாண்புகள் அகியவற்றைப் பற்றி இன்றியமையாத நிலையில் ஆசிரியர்களால் கையாளப்பட்டுள்ளது. அவைகளை நாம் உற்றுநோக்கினால் பெண்களின் மதிநுட்பமும் அவர்களின் பண்புநலன்களும் எண்ணி வியக்கத்தக்கனவாக உள்ளன.

இதனை,

“செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பா லான“

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் வழி செழுமை, அமைதி, வளமை, உண்மையை எடுத்துரைக்கும் சொல்வன்மைத்திறன், நன்மை, தீமை பகுத்துணரும் அறிவு, உயர் தன்மைப் பெற்ற பண்பு ஆகியவை பெண்களின் குணாதிசயங்களாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. இக்குணநலன்களைக் கொண்ட பெண்களைக் குறிக்கும் சொல்லாடல்களாக பெண், பெண்டிர், பெண்டு, பெண்மகள், மகடூ, மகள், மாதர் முதலியவற்றோடு எங்கை, காதலி, காமக்கிழத்தி, கிழத்தி, கிழவோர், கிழவி, செவிலி, தோழி, பெண்டாட்டி, மனையோள் அவற்றை சார்ந்த உறவினைச் சொற்களாகவும், பரத்தை, விறலி என்பன தொழில்நிலைச் சார்ந்த சொற்களாகவும் அறியமுடிகிறன்றன. பல சொல்லாடங்கள் கொண்டு அடையாளப்படுத்தப்பட்ட இந்நூலில் தோழியின் பாங்கினை வெவ்வேறு நிலைகளில் எடுத்துரைக்க தவறவில்லை. தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வகை பெண்களையே முதன்மை மாந்தர்களைக் கொண்டு இவர்களுடைய அன்பும், அறிவும், ஆளுமையும் பழங்காலத்து பெண்களின் வாழ்வியல் விழுமியங்களை பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருப்பதை இந்நூல்கள் நமக்கு வழிவகுக்கிறது (Sanmugam pillai, 1996).

## தோழியும், தொல்காப்பியமும்

சங்க அகஇலக்கியங்களில் தோழியின் பாங்கு இல்லாது துவண்டு இவ்விலக்கியப் பொருள்கள் என்று எண்ணுமளவிற்கு அகமரபிலும், புறமரபிலும் சிறந்து விளங்கக்கூடிய மாந்தர் தோழியும், பாங்கனும் என்பதாகும். இதில் பாங்கனை விட இருமரபிலும் உணர்வுச் சார்ந்த உள்ளம் சார்ந்த, உலகியல் சார்ந்த வரையறையோடு உலா வரக்கூடியவள் தோழியாக படம் பிடித்துக்காட்டப்படுகிறது. இதனையே தொல்காப்பிய நூற்பாவும் அடையாளப்படுத்துகிறது.

“தோழிதானே செவிலி மகளே”

தோழி என்பவளை செவிலியின் மகளாகக் குறிப்பிடுகிறது (Sanmugam pillai, 1996). காதல், திருமணம் என்ற முக்கோணக் கட்டமைப்புக் கொண்ட பக்கங்களின் உச்சத்தில் இருப்பவள் தோழி என்பவளே. அவள் மட்டுமே முக்கோணத்தின் இரண்டின் முனைகளை இணைக்கும் மையமாகச் செயல்படுகிறாள். இச்செயல்பாட்டினைக் கொண்ட தோழியே அகவாழ்வில் இடம்பெறும் மாந்தர்களின் அக, புற பகுதிகளின் உணர்வு உளவியல் அறியக் கூடியவளாகத் திகழ்கிறாள்.

நற்றாய், செவிலி, தலைவன், தலைவி, பாங்கன், ஊர்மக்கள், வாயில்கள் போன்றோரின் உள்ளக் கிளர்ச்சியினைக் கண்டு தனது செயலினைச் செய்பவள். தலைவன், தலைவியின் களவு, கற்பு ஆகிய இருநிலை உறவுகளிலும் பெரும் பங்காற்றி துணைக்கொண்டு வாழ்பவள் தோழி. இவளுக்கும் தலைவிக்கும் இடையே பிணையப்படும் பிணைப்பு, தலைவனுக்கும், பாங்கனுக்கும் இடையே காணப்படுவதில்லை என்பது உண்மை. தோழி என்பவள் தன்னலம் கருதாது தலைவன், தலைவியின் நலனை பற்றி மட்டுமே தனது நலனாகக் கருதப்படுபவளாக தோழியை தொல்காப்பியம் காட்டுகிறது.

“புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்

சொலத் தகு கிளவி தோழிக்கு உரிய”

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையின் போது இருவரும் கூடுவதற்குக் காதலி குறியிடப்பட்ட இடத்துக்கு அவள் வரத் தவறிய போது காதலன் ஊடல் கொள்வான். இந்த ஊடல் ‘புலவி’ என்று சொல்லக்கூடிய போலிப் பிணக்காகவும், கற்பு வாழ்க்கையின் போது தலைவன் தன்னைத் தவிக்கவிட்டு பரந்தையிடம் இன்பம் துய்த்து வந்தபோது அவளிடம் எண்ணம் கொண்டும் ஊடல்கள் நிகழ்கின்றன. இந்நிலையில் தோழியானவள் அவர்களின் மனநிலை ஒத்தவளாக இருந்து பக்குவமாக எடுத்துரைத்து இருவரையும் ஒன்று சேர்ப்பாள். இதுபோன்ற பெரும்பாலான சூழல்களில்

தோழிக்குரிய கூற்றுகள் அகத் திணையில் நிகழ்வதாக தொல்காப்பியம் நமக்கு எடுத்துரைக்கிறது (Sanmugam pillai, 1996).

## தோழியின் அடையாளம்

அக இலக்கண, இலக்கியங்களில் சிறப்பிடம் பெற்ற தோழியை தொல்காப்பியத்திலும் முன்னர் சொல்லப்பட்டதுபோல சூத்திரத்தின் வாயிலாக அறியமுடிகிறது (Sanmugam pillai, 1996).

தலைவியை நற்றாய்க்கு அருமை அருகாமையிலும் நின்று மற்றொரு தாயாக இருக்கக் கூடிய செவிலியன் மகள்தான் தோழி அன்று தொல்காப்பியர் காட்டுகிறார். இதைப் போன்று சங்க இலக்கியத்திலும் தோழி என்பவள் நற்பண்புகளைத் தனித் தன்மையில் சிறப்புற்று விளங்குகிறாள். தலைமைப் பண்பு, சொல்லாற்றல், பொறுப்புணர்ச்சி, நட்புணர்வு, அறத்தொடு நிற்றல், பணிவின் தன்மை முதலான பண்புகளைப் பெற்று நிற்கும் தோழி அகமரபிற்கு முழுமுதற் பொருளாகச் செயல்படுகிறாள் இவளின் உளவியல் சிந்தனைகளை அகமுக மாண்பமை (Intravercy) என்று சொல்லக்கூடிய, மனிதனின் மனதில் ஏற்படக்கூடிய உள்நோக்கி செல்லும் ஊக்கத்திறனைக் கண்டறிந்து செயல்படக் கூடிய, அகமுக ஆளுமைக் கொண்டவளாகவும் விதத்துக் காட்டப்படுகிறாள்.

“சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே” (Sanmugam pillai, 1996)

என்று கூறுவதோடு தொல்காப்பியர்

‘தாங்கரும் சிறப்பின் தோழி’ (Sanmugam pillai, 1996)

எனவும்

“ஓம்பல் தன்னியல் பாகலின் உரியதாகும் தோழிகண் உரனே”

எனவும் கூறி அடையாளப்படுத்துகிறார் (Sanmugam pillai, 1996). இதுபோன்று தோழி என்ற கதாப்பாத்திரம் பல இருந்தார்கள் என்று உரையாசிரியர்கள் கூறுவதோடு, தோழியர்கள் பல இருப்பினும் தலைவிக்கு உயிர்த்தோழிதான், தோழியாக சிறப்பிக்கப்படுவாள் என்பதை நாம் உணர வேண்டும். இதனையே காப்பியங்கள் பல நமக்கு எடுத்துக்காட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு உயிர்த்தோழியாக தேவந்தியும், மணிமேகலையில் உயிர்த்தோழியாக சுதமதியும், மாதவிக்கு உயிர்த்தோழியாக வசந்தமாலையும் இருந்தனர் என்றும் கூற்று ஈண்டு கூறத்தக்கது. தோழி என்பவள் ஒருவரையே அடையாளம் காட்டும் முறை இங்கு எண்ணிப்பார்க்கத்தக்கது. இங்கு காட்டப்படும் தோழிகள் அனைவரும் தலைவியின் மனத்திட்டங்களை அறிந்து செயல்படுகளாகவே நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே அவர்களின் உறவில் உளவியல் உணர்வே உயந்து நிற்கிறது.

## தோழியின் வரையறை

களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவனையும், தலைவியையும் நன்மை, தீமை எடுத்துரைத்து, தலைவியின் வேண்டல்களை, தலைவியின் நேர் எதிர்ப்பட்டுவிளம்பக்கூடியவளாக தோழி இடம்பெறுகிறாள். தோழியை தலைவியின் வயதொத்தவளாக யாதொரு தீங்கினும் ஏறி விடதாவளாக, தலைவியின் தானே உள்ளிறுத்தி ஆராயும் பண்புடையவளாக அவர்களுக்கு வருத்தம் நேர்ந்த போது அரவணைப்புக்கு உடன்பட்டவளாக, தலைவனும், தலைவியும் ஒத்துப்போகும் நிலையில் தனக்கேற்ற எல்லைக்குள் நின்று அறநெறிப்பாற்பட்டு, உள்ளமறிந்து உய்த்துணர்ந்து நன்னெறி உரைப்பவளாக இருவருக்கிடையே ஏற்படும் ஊடலைத் தன்மையறிந்து தனித்து இருவாயில்களையும் காப்பவளாக காணப்படுவளே தோழியாகும். இத்தோழியில்லா விடத்து இருவருமிடையே இடையறாத அன்பு பெருந்திணையின் பாற்படும் என்கிறது தொல்காப்பியம், இதனை,

“தோழியின் முடியும் இடனுமார் உண்டே”

என்ற சூத்திரம் உணர்த்துகிறது. முழுமுதற் பொருளாக தலைவியின் மீது மிக்காரும், ஒப்பாரும் இல்லாத அன்பு கொண்டவளாக நேர்மை, திருத்தம், கனிவு, அமைதி ஆகிய குணமொத்தவளாக

தலைவிக்கும், மற்றவர்களும் அவர்களின் நலன் காப்பவளாக மணவுணர்வினை சிந்தனையறிந்தவளாக தோழி காணப்படுகிறாள் (Sanmugam pillai, 1996).

## தோழியின் நெறிவழுவாது காக்கும் மரபு

எந்நிலையிலும் தன்னிலை வழுவாமல் நெறி பேணிக் காத்து நிறையன்போடு அகவாழ்க்கையில் இடம்பெறும் தோழிக்கென சில மரபுகளை தொல்காப்பியர் வகுத்துள்ளார். தலைவன், தலைவி, மற்றோர், உற்றோர் ஆகியோரின் உளச் சான்றினையறிந்து மதிநுட்பத்தோடு செயல்படும் தோழி இருநிலைகளின் மரபுணர்ந்து கருதப்படுகிறார். 1. வாயில்கள் மறுத்து ஊடல் களைதல், 2. தோழிக்குரிய அறம்பெற்று நிற்றல்.

### ஊடல் களைதல்

தலைவன், தலைவிக்கிடையே ஏற்படும் பிணக்கும், ஊடலைக்கும் தனக்கும் பொருட்டு தன்னை பிழையாக்கி மரபுணர்த்தி அவர்களது ஊடலைத் தனித்து கூற்று சூத்திரம் விளக்குகிறது (Sanmugam pillai, 1996). இதனையே சங்க இலக்கிய கலித்தொகைச் செய்யுளும் தோழியின் உளவியலை உயர்வாகச் சொல்கிறது.

"காமந்தநோய் கைம்பாகக் கண்படா அள்வயின்

புலத்தாயும் நீ ஆயின், பொய்யாளே வெல்குவவை"

எனும் செய்யுளும் தோழிக்கூற்றாக உரைக்கின்றது (Subramaniyan, 2003). பரத்தையாரிடம் சென்றுவரும் தலைவனை ஊடல் மறந்து தோழி, இச்செயல் மறுக்கவேண்டிய உரிமை, உடைமையும் உடைய தலைவியின் அன்பினை நினையாது, சென்றுவந்த செயலைச் செய்த கொடியவன் என்றச் சொல்லுக்கு அவளை உரியவளாக்குகிறாய் என்று தலைவனிடம் தலைவியின் மனநிலையறிந்தவளாக கூறுவதாக அவள் மரபு உணர்த்தப்படுகிறது. இதனை

"பரத்தை மறத்தல் வேண்டியுங் கிழவி

மடத்தகு கிழமை உடைமை யிவையும்

அன்பிலை கொடியை என்றதும் உரியவள்"

இங்கு கலித்தொகை தோழியிடம் கூறுவதாக உளவியல் உறவு உணர்த்தப்படுகிறது (Tamizhannal, 2009).

"புலத்தழப் புல்லாது விடுவாய்

இலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காண்நீ"

என்னும் செய்யுள் காண்பிக்கிறது (Subramaniyan, 2003).

## தோழி அறம் பெற்று நிற்றல்

தோழி என்பவள் தலைவியின் அறத்தைப் பொறுத்து நிற்பவள் அல்லள். அல்லாது காலத்தில் அறம் பெற்று நிற்பவள் என்பதனை தொல்காப்பியச் சூத்திரம் விளக்குகிறது.

"அறத்தொடு நிற்குங் காலந் தன்றி

அறத்தியல் மரபிலள் தோழி என்ப"

அவளுக்குரிய அறத்தினையும் வகைப்படுத்துகிறாள். தொல்காப்பியர் எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல் கூறுதல், உசாஅதல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்புதல் ஆகியவற்றை கூறுகிறார். இவ்வெழு நிலையில் அறநிலையில் தோழிக் கூற்றானது நிகழ்கிறது (Tamizhannal, 2009).

## தோழியின் சொல்வன்மை

அகவாழ்வில் தலைவியின் வாழ்க்கை நிலைப்பெற்று, விஞ்சி நிற்கவும், தோழியின் சொல்திறம் என்பது தலைவனின் சிறப்பு, உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை உள்ளிறுந்து குறிப்பறிந்த நயமிக்கவளாக, சொல்வன்மை மிக்கவளாக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தோழியின் உரைத்திறத்தால் தலைவியின் தாய், தலைவன், மக்கள் ஆகியோரையும் தன் சொல்லைக் கேட்டு பின்பற்ற வைக்கக்கூடிய திறன்பெற்ற அறிவுடையவளாக காணப்படுகிறாள். இச்சூழலில் எல்லோரின் மனநிலையும், உணர்ச்சிகளையும், அறிந்த உளவிளல் ஆய்வாளனாக சங்க இலக்கியத் தொல்காப்பியம் நமக்கு எடுத்துரைக்கிறது. அவளுடைய சொல்லாளுமை என்பது புண்ணுக்கு மருந்தாகவும், மனத்துக்கு இதமாக திருந்தும் பண்பாகவும் புலப்படும்.

தலைவி என்பவள் தலைவனின் அன்பாலம், அரவணைப்பாலும் மயங்கி, அவனையே உலகமாக நினைந்து வாழ்பவள் ஆதலால் அவன் பிழையறியாது திகழ்பவள், ஆனால் தோழியே ஐயங்கண்டு கொண்டு அவனைக் கண்காணித்துச் செயல்படுவாள் களவொழுக்கத்திலிருந்து கற்பொழுக்கத்திற்கு விரைந்து வரைவு கடாதல் வேண்டுதனே தோழியின் அவாவும், அதனை தள்ளிக்கொண்டே போகும் தலைவனும் அதனையறிந்த தலைவியின் இரக்கத்தக்க நிலையறிந்த தோழி தான் துயருற்றது போல் எண்ணி வருந்துகிறாள். தோழியின் சொல்திறனால், பேசும் திறனால், ஆளுமையினால் தொல்காப்பியரின் சூத்திரங்களின் 'இயற்பழித்தல்' என்ற கோட்பாட்டு உளவியல் அடிப்படையில் தலைவனின் உளவியலறிந்த உறவாக, தலைவியின் உள்ளுணர்ச்சி உணர்ந்தவளாகவும் இடம்பெறும் தோழி, வருந்துகின்ற தலைவிக்கு தலைவனின் செயல்களை இயற்பழித்து உரைக்கின்றாள்.

இதனை,

"செங்கரு மொழியால் சிதைவுடைத்தாயினும்

என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ

அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்

ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்"

என்று நூற்பாவினுள் அமைத்து தோழியின் சொல்லாளுமையின் திறத்தினை காட்டுகிறார். இதனை சங்க இலக்கிய செய்யுளும் விளம்புகிறது (Tamizhannal, 2009).

"நொய் மொழிதலுங் கூடிய ஊர்தலும்

செல்வமன்று தன் செய்வினைப் பயனெனச்

சொல்லும் என்ப சான்றோர் நேர்ந்தோர்

புன்கண் செல்வம் செல்வம் என்பதுவே"

என்ற பாடலில் தலைவன், தலைவியோடு கூடி அன்போடு வாழ்வதே பெரிய செல்வமாகும் என்று தலைவி பழிப்பது போன்று தலைவனுக்கு அறிவுரை கூறுவதாக உள்ளது.

## சிறப்பிற்குரிய தோழி

தலைவன் தலைவியின் உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் அகப்போராட்டங்களையும் உணர்ச்சி மோதல்களையும் அவர்கள் இடத்திலிருந்து உள்ளத்தில் உணருமாறு உரைக்கும் உறவுத்தான் தோழி களவுக் காலத்தில் தலைவி பிரிந்து செல்லும் தலைவனை இடித்துரைத்தும் தலைவனின் பிரிவைத் தாங்காத தலைவியை ஆற்றுப்படுத்துவதும் இவரின் கடமையே. இதனை, தோழியின் சிறப்பாக பின்வரும் நூற்பாவினுள் வடிமைக்கிறாள்.

"முன்னிலை அறனெனப் படுலென் றிருவகைப்

புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்

வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையன் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலட்டு வகையினும்
தாங்கருஞ் சிறப்பின் தோழிமேன"

அறம், சிறப்பு, ஆளுமை, மரபு ஆகிய பண்புகளை உள்ளடக்கியே அகமாந்தர்களின் உணர்வுகளையும், உறவுகளையும் பெரும் பொறுப்புணர்வோடு வழிநடத்தி செல்லக்கூடியவளாகவும், தலைவன் தலைவியின் வாழ்க்கையின் திசைக்கட்டியும், அவர்களை நன்னெறிப்படுத்தியும் அவர்களுக்கு உலகியல் விடயங்களைங்களை எடுத்துக் கூறும் தகுதியுடையவளாகவும் இருந்தும் அவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் களைந்து உற்றத் துணையாக இருந்து, தனி இடத்தையும், தனிச் சிறப்பினையும் தலைவியிடத்தும் ஓர் இடத்தினையும் பெற்ற உறவாக அகவாழ்க்கை தோழியைச் சிறப்பிறத்தது (Tamizhannal, 2009).

## முடிவுரை

மொழியின் பொருள் உணர்த்தும் இலக்கண, இலக்கியங்களில் அகவாழ்வு என்பது மரபுநிலைச் சார்ந்த ஒன்றாகும். மனிதனின் வாழ்வியலில் பெரும்பகுதியே அகமரபை ஒன்றியதுதான். இச்சூழலில் மொழியில் ஆதாரங்களாக விளங்கும். நூல்களில் ஆவணப்படுத்தப்படுத்துகிறது. உறவுநிலையில் உயர்ந்தவளாகவும், உள்ளக் கிடக்கினை உணர்ந்தவளாகவும் தோழி அடையாளப்படுத்தப்படுகிறாள். பொருள் உணர்த்தும் விடயங்களில் உறவுநிலை என்பது நடுமயமான ஓர் அகவாழ்வு கூறாகும். இவ்வுறவில் மனித வாழ்க்கையின் முக்கியமான பெரும்பங்காற்றக்கூடிய உறவாக தோழி, நட்பு என்ற உறவுகள் இன்றும் காணப்படுகிறது. இவ்வுறவிற்கான இன்றியமையின்மை புலப்படுத்த முற்படும்போது அவ்வுறவு மட்டுமே அகமும், புறமும் சார்ந்த வாழ்வியலில் நுண்மான் நுழைப்புலத்தோடு அனைத்து உறவுகளின் உளவியல் முறைச் சார்ந்த நிலையில் செயல்படக்கூடிய உறவாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. ஏன்? இன்றும் இச்சூழலையே நாம் அன்றாட வாழ்வில் நீட்சியே உணரமுடிகிறது. தோழி என்ற உறவு மட்டுமே தன்னிடம் விடுத்து, தன்னிலை மறந்து மற்றொரு உறவுநிலை நின்று உறவுகளைக் கண்ணாடிக் குடுவையைக் கையாளுவதுபோது தனது சொல்வன்மையால் இலாவகமாகக் கையாண்டு, உளவியல் உறவு நிலையில் முகிழ்ந்து அவ்வுறவினை வலுப்படுத்துகிறாள். தலைவன், தலைவி காதல் வாழ்க்கையில் இறுதி வரை கைகோர்த்து கரைச்சேர்க்கும் தன்மையைக் கொண்டவளாக தோழியின் உறவு காணப்படுகிறது. இவ்வுறவியலை தவிர்த்து தோழிக்குரிய வாழ்வியல் எங்கும் சொல்லப்பட்டதாக அறியமுடியவில்லை. தன் உள்ளம் சார்ந்த உறவில் நெறிபிறழாத ஆற்றல் கொண்டவளாக விளங்கும் உறவுதான் தோழி.

## References


Sanmugam pillai, M. (1996) Tolkappiyam, Mulai nilaiyam, Chennai, India.

Subramaniyan, S.V. (2003) Sanga Ilakkiyam Pathupattu, New Century Book House, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License